# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 22 செவ்வாய்க்கிழமை (04-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 69


# வவுனியா வரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு!

## பராமரிக்க முடியாத நெருக்கடி நிலை

கொழும்பு, பெப்ரவரி 4

**ஏனைய வன்னிப் பகுதிகளில் இருந்து தினமும் வவுனியாவுக்கு வரும் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்திருக்கின்றது. பெருகி வரும் அகதிகளின் எண்ணிக்கையைச் சமாளிக்க முடியாமலும், அவர்களைப் பராமரிக்க முடியாமலும் வவுனியாவில் உள்ள அரச அதிகாரிகள் திண்டாடுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

வன்னியின் ஏனைய பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கு வரும் அகதிகளை வேறுஇடங்களுக்குச் செல்ல விடாது வவுனியாவில் உள்ள தடுப்பு முகாம்களில் அரசு தடுத்து வைத்திருப்பது தெரிந்ததே—

அகதிகள் தொடர்ந்துவந்து கொண்டிருப்பதால் இவ்வாறு தடுப்பு முகாம்களில் இருக்கும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த அகதிகளில் யாழ். குடாநாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் அகதிகள் மட்டும் திருகோணமலை ஊடாக கப்பலில் வடக்கே அனுப்பப்படுகின்றார்கள்.

இவ்வாறு தினசரி 300 பேர் என்ற வீதத்தில் வவுனியா தடுப்பு முகாமிலிருந்து திருகோணமலைக்கு அகதிகள் அனுப்பப்பட்டு வந்தனர்.

ஆனால் திருகோணமலைக்கும் — காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மூன்று கப்பல்களில் இரண்டு பழுதடைந்ததால் பயணிகளை வடக்கே அனுப்பும் நடவடிக்கை தடைபட்டது.

இதனால் வடக்கே செல்வதற்குத் தயாரான நிலையில் — வவுனியாவில் இருந்து வந்த — சுமார் மூவாயிரம் பேர் திருகோணமலையில் கப்பல் பயணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு மேலும் பயணிகள் தொடர்ந்து திருகோண

(7 ஆம் பக்கம் பார்க்க)



சேவல் சின்னத்துக்கே போட்டி எண்டால் தொண்டா பாடு சிக்கல் தான்...!

## தொடர்ந்து விளக்கமறியலில்

கொழும்பு, பெப்.4

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகியோரின் கொலைகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள 9 படையினரும் இம்மாதம் 11 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள்.

மே மாதம் 12 ஆம் திகதிக்கு முன்பதாக சாட்சிகளை தம் முன்னிலையில் ஆஜர் செய்யும்படி கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் முனிதாஸ நாணயக்கார யாழ்ப்பாணம் தலைமை பொலீஸ் இன்ஸ்பெக்டர் உபாலிசேனரத்தினவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-5)

## தாக்குதலில் ஹெலி சேதம்

வவுனியா — மன்னாருக்கு இடையில் கடந்த வெள்ளியன்று படைவீரர்களை ஏற்றியிறக்கிய ஹெலிக்கொப்டர் ஒன்று புலிகளின் சினைப்பர் தாக்குதலில் சிறிய சேதத்துக்கு உள்ளானதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. இந்த ஹெலிக்கொப்டர் தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. (உ-150)

## புலிகளும் வேட்பு மனு தாக்கல் செய்யலாம்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 4

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது ஏதேனும் ஒரு சபைக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பெயரால் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டால் அது நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்பட்ட 34 கட்சிகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் ஒன்று என்றும் —

பதிவுகளின் படி யோகரத்தினம் யோகி அக்கட்சியின் செயலாளர் என்றும் —

61, அப்துல் கபூர் மர்வத்தை, கொழும்பு — 3 என்பது அக்கட்சியின் முகவரி என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-150)

## ரெலோவும் போட்டி

கொழும்பு, பெப். 4

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது கொழும்பு மாநகரசபையில் 'ரெலோ' இயக்கம் போட்டியிடும்.

கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற தலைமைக் குழுக் கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டதாக அக்கட்சியின் பேச்சாளர்சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்; விடுதலைப் புலிகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் — மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் — நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்— ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து சகல இனமக்களும் வாழும் கொழும்பு மாநகர சபையில் தமது கட்சி போட்டியிடுவதாக ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

தமது கட்சியின் சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரின் பெயர் இரண்டொரு தினங்களில் வெளியிடப்படும் என்றும்—

59 வேட்பாளர்களை தேர்தலுக்கு நிறுத்தப்போவதாகவும்—

சகல தமிழ்க் கட்சிகளும் தமது கட்சிக்கு ஆதரவு நல்க வேண்டும் என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார். (உ-5-150)

## நாட்டின் சுதந்திர தினம் இன்று; சமய நிகழ்ச்சிகளுக்கு முக்கிய இடம்

கொழும்பு, பெப். 4

இலங்கையின் 49 ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகின்றது.

முக்கிய சுதந்திர தின நிகழ்வுகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறுகின்றன.

இந்த வருட சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் சமய நிகழ்ச்சிகளுக்கு முக்கிய இடமளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது

இதையொட்டி நேற்று இரவு முழுவதும் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பிரித் ஓதும் வைபவம் இடம் பெற்றது.

நாட்டில் பல்வேறு வழிபாட்டுத் தலங்களில் சமய நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று காலைசுதந்திர சதுக்கத்தில் நடைபெறும் சுதந்திர தின வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்காற்றுவார். அங்கு அவருக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் இராணுவத்தினர் 21 பீரங்கி வேட்டுகளைத் தீர்ப்பர்.

தொடர்ந்து காலை 8.33

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் தாக்கு மூன்று படையினர் பலி

கொழும்பு, செப். 4

கிளிநொச்சியில் படையினரின் கண்காணிப்பு நிலையம் ஒன்றின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2-30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தின் போது படையினர் திருப்பித் தாக்கினர் என்றும் —

அப்பொழுது 7 அல்லது 8 புலிகள் இயக்கத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-5)

## படையினரின் ஷெல் தாக்குதலில் செங்கலடிப் பகுதியில் மூவர் பலி!

### கூட்டணி எம். பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

லண்டன், பெப். 4

கிழக்கில் மட்டக்களப்பு மாவடி வேம்பு இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதலை அடுத்து படையினர் நடத்திய கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களில் செங்கலடிப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் மூவர்கொல்லப்பட்டுள்ளனர். 11பேர் வரை காயம் அடைந்தனர். பிரசித்தி பெற்ற இந்து ஆலயமான சித்தாண்டி ஆலயமும் சேதமடைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி எம். பி. ஜோஸப் பரராஜசிங்கம் இது தொடர்பாக ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதி உள்ளார்.

படையினர் கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதல்களை நடத்துவது கண்டிக்கப்படத்தக்கது என்று அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சேவல் சின்னத்தைக் கேட்டு இ.தொ.கா. நீதிமன்றம் செல்லும்

கொழும்பு, பெப். 4

சேவல் சின்னத்தை தங்கள் கட்சிக்கு தேர்தல் ஆணையாளர் வழங்காததை எதிர்த்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நீதிமன்றம் செல்ல முடிவு செய்துள்ளது.

இ. தொ. கா. வின் புதிய பொதுச்செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள அமைச்சர் தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமான் பி. பி. சியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் ''இ. தொ. கா வின் பொதுச் செயலாளராக என்னை அங்கீகரிக்க தேர்தல் ஆணையாளர் மறுத்துள்ளார். அத்துடன் எங்கள் தேர்தல் சின்னமான சேவல் சின்னத்தை வழங்கவும் மறுத்துள்ளார். இதற்கு எதிராகவே நீதிமன்றம் செல்லவுள்ளோம்'' என்றார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் "குறிஞ்சி மெடிக்கல்ஸ்" அதே இடத்தில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றார்கள்.

குறிஞ்சி மெடிக்கல்ஸ்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

(9236)

## மலர் அஞ்சலி

அந்தோனிப்பிள்ளை மரியதாசன்
(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

'இமயத்தின் உயரம் இவ்வளவு
என மனனம் செய்யும் O/L வகுப்பில் நடமாடி
எம்மைக் 'கணித்த' இமயம்
இங்கு சாய்ந்துபோனது!
திசையைக் 'கணித்து' த்தந்த
துருவநட்சத்திரம் உதிர்ந்துபோனது!
திக்கெல்லாம் சிதறி
நட்சத்திரங்களாய் ஜொலிக்கும்
இந்துவின் இளையமைந்தரின் சார்பில்
'மரியதாஸ் மாஸ்ரருக்கு' மலர் அஞ்சலி!

1987 O/L (Year - 11 A&E)
மாணவர்கள்
யாழ். இந்துக்கல்லூரி.

(45089)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
வேலுப்பிள்ளை கனகசபை
J. P. U. M.

(சாவகச்சேரி – கிளிநொச்சி பதில் நீதிபதி, உத்தியோகப் பற்றற்ற நீதிபதி-சமாதான நீதிவான், மரண விசாரணை அதிகாரி அரசாங்க முடிக்குரிய வழக்கறிஞர், முன்னாள் தனியார் போக்குவரத்து வழக்கறிஞர், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர், சாவகச்சேரி சிரேஷ்ட சட்டத்தரணி)

அன்பான தந்தையே, ஆருயிர்த் தெய்வமே!
பாசப்பிணைப்பால் எம்மை வளர்த்து
நேசத்துடிப்பால் உயிர்காத்து
கண்ணை இமைகாப்பதிலும் மேலாகக் காத்து
பாசத்தின் பெருமை சொல்லிப்பிள்ளைகள்
எம் வாழ்வுக்காய் பெரும்பாடுபட்டீர்கள்!
சுற்றவர் மத்தியில் தலை நிமிர்ந்து வாழ வைத்தீர்கள்
நாம் வாழும் நேரத்தில் கண்களைக்
குளமாக்கி கண்மூடிச் சென்றதேனோ?
முப்பத்தொரு நாள் ஓடிமறைந்தாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்ப்
பூக்களால் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியை நிகழ்வுகள் இன்று (04 - 02 - 97) காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். உற்றார், உறவினர், நண்பர்கள் சமுகம் தந்து மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

76, இலந்தைக்குளம்,
அரியாலை,
(மாம்பழம் சந்தி). (9235)

## அராலிப்பகுதியில் மீன் பிடிக்க மீண்டும் அனுமதி

அராலித்துறை தொடக்கம் பொன்னாலைப் பாலம் வரையான கடற்பகுதியில் மீண்டும் பகல் நேரத்தில் மீன்பிடிக்க இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த இரு வாரங்கள் மேற்குறிப்பிட்ட கடற்பகுதியில் மீன் பிடிக்க தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதனால் அப்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் அராலி, வட்டுக்கோட்டை, மூளாய், பொன்னாலைப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. (ஐ-12)

## குற்றப்புலனாய்வு புதிய இயக்குநர்

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் புதிய இயக்குநராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ. ஜே. எஸ். பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (உ-150)

## மகளிர் இல்ல 15 ஆம் ஆண்டு நிறைவு விழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் சங்கீத பூஷணம் திருமதி த. சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளும், மகளிர் இல்ல மாணவிகள் ஆக்கிய பொருள்கள் அடங்கிய பொருட்காட்சியும் இடம்பெறவுள்ளன. (அ-5)

## கடலுக்குச்செல்ல அனுமதி இல்லை

குருநகர், பெப் 4

குருநகர்ப் பகுதி மீனவர்கள் எவரும் நேற்று கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதற்கிடையில் கடந்த சனியன்று மீன்பிடிப்பதற்காகக் குருநகர் கரையில் இருந்து புறப்பட்டுச் சென்ற மீனவரான சூசைப்பிள்ளை யோகம் என்ற கடற்றொழிலாளி நேற்றே கரைக்குத் திரும்பினார். கரை திரும்பிய சமயம் அவர் கைது செய்யப்பட்டார். (உ-51)

A/L 98
CHEMISTRY
திரு. மகேஸ்வரன்
PHYSICS
திரு. ஸ்பெல்மன்
O/L DAY CLASS
புலமைப் பரிசில் '97
SHAMROCK
யாழ்/ எச் பேட்டை வீதி
(45087)

## கண்ணீர் அஞ்சலி


தென்மராட்சி பிரதேச செயலர்
உயர்திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி புண்ணியர் சின்னத்தங்கம்

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

- சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.

(சி/54)

## 12ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 04 — 1920
மறைவு: 04 — 02 — 1985

அமரர் நாராயணசாமி இராமசாமி

அன்பின் திருஉருவாய் ஆண்டுகள் பல
கடந்தோடியும் எம் நெஞ்சில்
நீங்கா இடம் பல பெற்றாய்.
வந்தோரை வாழ்விக்கும் எம் தல்லவன்
காலம் எம்மை மாற்றிலும்,
தங்கள் அன்புக்கு நிகருளதோ?
ஆத்மா சாந்தியடைய தங்கள்
நன்னாளில் இறைவனைப் பிரார்த்திப்போம்.
சாந்தி! சாந்தி! நன்முக்தி பெறுவீர்கள்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,
66, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (9233)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 10 — 10 — 1922
அழைப்பு: 04 — 01 — 1997

திருமதி A. R. சீவரத்தினம்
(றோஸ் அக்கா)
(இளைப்பாறிய ஆசிரியை)

அன்பு, அடக்கம், கல்வியறிவு, இரக்கம், சகிப்புத்தன்மை இவையெல்லாவற்றுக்கும் இலக்கணமாக வாழ்ந்த ஆசிரியை திருமதி A. R. சீவரத்தினம் அவர்கள் மறுமைக்குச் சேர்ந்த 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அவரது வாழ்வையும் சேவையையும் நினைவு கூர்ந்து நன்றி செலுத்தும் ஆராதனையும் நாளை 1997 - 02 - 05 புதன்கிழமை காலை 11. 30 மணிக்கு (இலங்கை நேரம்) அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரன் இ. காங்கேயன் குடும்பமும்,
மைத்துனன் V. K. S. நவரெத்தினம் குடும்பமும்,
மற்றும்
மைத்துனர்களும்.

லற்றிமர் லொட்ஜ்,
கண்டி வீதி,
சாவகச்சேரி. (சி/56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போன விமானங்களை விடுதலைப் புலிகளே வீழ்த்தினரா?

மூன்று வார காலத்திற்குள் தனது மூன்று விமானங்களை தொடராக இழந்திருக்கிறது விமானப்படை.

மூன்று விமானங்களின் மொத்தப் பெறுமதி கொஞ்ச நஞ்சமல்ல; குறைந்த பட்ச மதிப்பீட்டின்படி 30 கோடி ரூபாய்கள்.

மூன்று வாரத்துக்குள் மூன்று விமானங்களைத் தொடராக இழந்தமை இலங்கை விமானப்படை வரலாற்றில் இதுதான் முதற்தடவை.

மூன்றாம் கட்ட ஈழப் போரை புலிகள் பிரகடனம் செய்த பின்னர் இன்றுவரை ஒன்பது விமானங்களையும் இரண்டு ஹெலிக்கொப்டர்களையும் விமானப்படையினர் இழந்துள்ளனர். மொத்தம் பதினொரு இழப்புக்கள்.

### தொடர் இழப்புகள்

மூன்றாம் கட்ட ஈழப் போரில் விமானப்படையினருக்கு முதலாவது பேரிழப்பை ஏற்படுத்தி வைத்தது புலிகள்தான். அதுவும் தொடர் இழப்புத்தான், அடுத்தடுத்து இரண்டு நாள்களில் இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

28 ஏப்ரல் 1995 முதலாவது 'அவ்ரோ' புலிகளின் குறியில் மாட்டியது. மறுநாள் 29 ஏப்ரல் 1995-ல் மற்றுமொரு 'அவ்ரோ' புலிகளின் குறிக்கு இரையானது.

முதல் இழப்பே தொடர் இழப்பாக இருந்தமையாலோ என்னவோ; அதன் பின்னர் பல தொடர் இழப்புக்களை விமானப்படை சந்தித்து வருகிறது என்பது ''சென்டிமெண்டான'' விஷயம் போலாகிவிட்டது.

மூன்றாம் கட்ட ஈழப் போரில் இதுவரை மூன்று தொடர் இழப்புக்களை விமானப்படை சந்தித்துள்ளது.

1995 ஏப்ரல் மாதம் 28, 29 களில் ஒரு தொடர் இழப்பு. பின்னர் 1995 நவம்பர் 18-ல் 'வை — 8' விமானம் ஒன்று காங்கேசன்துறையில் புலிகளின் 'ஒலிகன்' பீரங்கியால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதையடுத்து நவம்பர் 22-ம் திகதி 'அண்டநோவ் 32' விமானம் ஒன்று காங்கேசன்துறைக் கடலுக்குள் விழுந்தது.

அதன் பின்னர் ஏற்பட்ட தொடர் இழப்பு சமீபத்தில் ஏற்பட்டதுதான்.

ஜனவரி 6 ஆம் திகதி 1997 அன்று உளவு விமானம் காணாமல் போனது. ஜனவரி 20ஆம் திகதி 'வை—12' விமானம் காணாமல் போனது. மறுநாள் 21 ஆம் திகதி 'கிபிர்' போர் விமானம் நீர்கொழும்பு கடலுக்குள் விழுந்தது.

நீர்கொழும்பு கடலுக்கு மேலாகப் பறப்பதென்றால் இனிமேல் விமானிகளுக்கு கலக்கமாகத்தான் இருக்கப் போகிறது. மூன்றாம் கட்ட ஈழப்போரில் மொத்தம் இரண்டு விமானங்களை நீர்கொழும்பு கடல்தான் உள்ளே இழுத்து வைத்திருக்கிறது,

### விடுதலைப் புலிகள் வீழ்த்தியவை

மூன்றாம் கட்ட ஈழப் போரில் வீழ்ந்த ஒன்பது விமானங்களில் நாலு விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இழக்கப்பட்ட இரண்டு ஹெலிக்கொப்டர்களில் ஒன்று புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட விமானங்கள் வருமாறு: 28, 29 ஏப்ரல் 1995 இரண்டு அவ்ரோ விமானங்கள். பலாலி விமானத் தளத்துக்கு தரைப்பாதையின் மேலாகப் பறந்து செல்லும்போது விமான எதிர்ப்பு ஆயுதத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

படையினரின் 'முன்னேறிப் பாய்ச்சல்' நடவடிக்கைக்குப் பதிலடியாக 14 ஜூலை 1995-ல் 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் 'புக்கார' விமானம் புலிகளின் விமான எதிர்ப்பு படைப்பிரிவால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

### காத்திருந்த புலிகள்

பலாலி விமானத் தளத்துக்குதரைக்கு மேலாகச் சென்று இறங்காமல் கடலுக்கு மேலாகவே விமானப்படை விமானங்கள் செல்லத் தொடங்கின. காங்கேசன்துறை கடற்பகுதிக்கு மேலாகச் சென்று பலாலி விமானத் தளத்தில் தரையிறங்குவது பாதுகாப்பானது. ஆயினும் காங்கேசன்துறை கடற்பகுதியில் தாழப்பறக்கத் தொடங்கியே விமானத் தளத்தில் தரையிறங்குவது வழக்கமாக இருந்தது.

அதனைக் கவனித்துக் கொண்ட புலிகள் கடலில் காத்திருந்தனர். 1995 நவம்பர் 18 ஆம் திகதி 'வை-8 விமானம் காங்கேசன்துறை கடற்பகுதியில் தாழப் பறந்து விமானத் தளத்தில் தரையிறங்கத் தயாரானது. புலிகள் ஒலிகன் பீரங்கியால் தாக்கினார்கள். விமானம் கடலுக்குள் விழுந்தது.

அதேபோல 'எம். ஐ. 17' ஹெலிக்கொப்டரும் வெற்றிலைக்கேணி முகாமைநெருங்கி தாழப் பறக்கத் தொடங்கியபோது புலிகளால் தாக்கப்பட்டது. 22 ஜனவரி 1996-ல் 'எம். ஐ. 17, ஹெலிகொப்டர் சுடப்பட்டு கடலுக்குள் விழுந்தது.

தம்மால் சுட்டுவீழ்த்தப்பட்ட அனைத்துக்கும் புலிகள் உடனடியாக உரிமை கோரியுள்ளனர்.

### உரிமை கோராத புலிகள்

இதேவேளை சமீபத்தில் ஏற்பட்டுள்ள மூன்று விமான இழப்புக்களுக்கும் புலிகளுக்கும் சம்பந்தம் இருக்கக் கூடுமோ என்று சிலரால் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

வெறும் பரபரப்புக்காக எவ்வித ஆய்வுமில்லாமல் அவ்வாறான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

எதிர்க்கட்சி சார்பான செய்தியாளர் கூட மூன்று விமானங்களையும் வீழ்த்தியது தாம் தான் என்று புலிகள் உரிமை கோரினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றுதான் எதிர்பார்த்தனர்.

உள்ளூராட்சித் தேர்தல் வரும்போது ''மூன்று விமானங்களை புலிகளிடம் இழந்துவிட்டது அரசாங்கம்'' என்று கூறுவது பிரசார ரீதியில் இலாகபரமானதுதான்.

இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்தது என்றால் விமான ஓட்டிகளின் திறமை இன்மையும் ஒரு காரணமோ என்று மக்கள் சந்தேகிப்பார்களே தவிர அரசாங்கத்தின் மீது குறை சொல்லமாட்டார்கள்.

எதிர்க்கட்சிக்கும் எதிர்க்கட்சி சார்ந்த செய்தியாளர்களுக்கும் இப்போது புலிகள் மீது கெட்ட கோபம் வந்திருக்கும். வீழ்த்தினார்களோ இல்லையோ வீழ்த்தியதாக உரிமை கோரித் தொலைத்திருக்கலாமே என்றுதான் நினைப்பார்கள்.

மக்களுக்கு சரியான செய்திகள், தகவல்கள் கொடுக்க வேண்டும் என்பதைவிட, செய்திகளையும், நிகழ்வுகளையும் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப திரித்துக் கூறுவதற்கே விரும்புகின்றனர்.

புலிகளைப் பொறுத்தவரை தம்மால் மேற்கொள்ளப்படாத நடவடிக்கைகளுக்கு உரிமை கோருவதில்லை. தம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் சர்வதேச அளவிலோ உள்நாட்டிலோ கெட்ட பெயரை சம்பாதித்துக் கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளையும் உரிமை கோருவதில்லை. அது தான் இதுவரையில் புலிகளின் பாணி.

புலிகள் உரிமை கோராத தாக்குதல்கள் எப்படிப்பட்டவை? தனிநபர்களை இலக்காகக் கொண்ட சில நடவடிக்கைகள், பொதுமக்களும் பலியாகக் காரணமான தாக்குதல்கள் போன்றவைதான் உரிமை கோரப்படாதவை.

எனவே அவற்றையும் விமானத் தாக்குதல்களையும் ஒன்றாய் போட்டுக் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. விமானங்களைத் தாக்கினால் தாராளமாக உரிமை கோரலாம். யாருமே கண்டிக்க மாட்டார்கள். பயணிகள் சென்றுகொண்டிருக்கும் விமானங்களைத் தாக்குவது மட்டுமே கண்டனத்துக்குரியதாக அமையும்.

ஆனால் இங்கு வீழ்ந்தது அனைத்தும் படையினர் பயன்படுத்தும் விமானங்கள் மற்றும் உளவு, போர் விமானங்கள் உரிமை கோரினால் விளைவுகள் என்ன?

மேற்படி மூன்று விமானங்களும் புலிகளால் வீழ்த்தப்பட்டதாக உரிமை கோரியிருந்தால் எப்படிப்பட்ட விளைவுகள் தோன்றியிருக்கும்?

1. அரசாங்கத்துக்கு பலத்த இழப்பை புலிகள் ஏற்படுத்தி விட்டதாக கருதப்படும் என்பதால், அரசின் 'இமேஜ்' பாதிக்கப்படும்.
2. சர்வதேச அளவில் புலிகளின் தாக்குதல் பலம் வியக்கப்பட்டிருக்கும்.
3. படையினர் மத்தியில் உளவியல் ரீதியான தாக்கம் ஏற்பட்டிருக்கும். விமானப் படை விமானிகள் மத்தியிலும் தாக்கம் ஏற்பட்டிருக்கும்.

ஆக, விமானங்கள் வீழ்ந்தமைக்கு புலிகள் தான் காரணம் என்றால் அதனை உரிமை கோராதிருப்பதற்கு எவ்வகையான காரணங்களும் இல்லை.

அதுதவிர இராணுவ ரீதியில் யார் மேலோங்குவது என்ற பலப்பரீட்சையே இப்போது நடைபெற்று வருகிறது. விமானங்களை வீழ்த்தியிருந்தால் புலிகளுக்கு இராணுவ ரீதியிலும், பிரசார ரீதியிலும் மிகச் சாதகமான அம்சமாகவே அது அமைந்திருக்கும்: உடனடியாக உரிமை கோரியிருப்பார்கள்.

ஆனால் ஒன்று, விமானங்களை வீழ்த்தாமல் கூட புலிகள் உரிமை கோரியிருந்தால் கூட உலக அளவில் அது நம்பப்பட்டிருக்கும்.

ஆயினும் அதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன.

உளவு விமானமும் வை-12 விமானமும் கடலில் வீழ்ந்தனவா அல்லது காணமல் போயினவா என்பது உடனடியாகத் தெரியாது. அந்நிலையில் தாக்கிவீழ்த்தியதாக உரிமை கோரிவிட்டால், குறிப்பிட்ட விமானம் ஒரு வேளை திசைமாறிப்



நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்த கிபிர் ஜெட் விமானத்தின் சிதைவுகள் கரைக்கு எடுத்து வரப்படுகின்றன.

போய் தரையிறங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டால் என்னாகும்? உரிமை கோரியது பொய்யாகிவிடும். அதனால் தனது இராணுவ ரீதியான செய்திகளின் நம்பகத்தன்மையை குறிப்பிட்ட இயக்கம் இழக்க வேண்டியிருக்கும்.

பொய்யாக உரிமை கோர வேண்டுமானால் குறிப்பிட்ட விமானங்கள் உண்மையாகவே வீழ்ந்துவிட்டனவா என்று அறிந்த பின்னர்தான் உரிமை கோர வேண்டும். எனவே உடனடியாக உரிமை கோரமுடியாது.

அதுதவிர சுட்டு வீழ்த்தியதாக உரிமை கோருவதாக இருந்தால், எந்த இடத்தில் வைத்துச் சுடப்பட்டது என்பதையும் தெரிவித்தாக வேண்டும். அவ்வாறு சுடப்பட்டதாகத் தெரிவித்த ஒரு பகுதியுடன் தொடர்பே இல்லாத வேறு பகுதியில் வீழ்ந்த விமானமோ அதன் பகுதியோ கண்டுபிடிக்கப்பட்டாலும் உரிமை கோரியது பொய்யாகிவிடும்.

சமீபத்தில் தொடராக வீழ்ந்த விமானங்களில் கிபீர் விமானம் வீழ்ந்ததில் மட்டுமே எங்கே. விழுந்தது எப்போது விழுந்தது என்ற விவரங்கள் திட்டவட்டமாக தெரிந்தன. ஏனைய இரண்டு விமானங்களின் விடயத்தில் இதுவரை அவை எங்கே விழுந்தன என்ற விவரங்கள் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

எனவே தம்மால் வீழ்த்தப்படாத விமானங்களை வீழ்த்தியதாக உடனடியாக உரிமை கோரமுடியாது. விமானங்கள் வீழ்த்தப்படும் விடயத்தில் உடனடியாக உரிமை கோரப்படுவது மட்டுமே உண்மையானதாகஇருக்கும்.


புலிகளும் தம்மால் சுடப்பட்ட விமானங்களுக்கு உடனடியாக உரிமை கோரியே வந்துள்ளனர்.

அதேசமயம் வீழ்ந்த விமானங்களோடு புலிகளைத் தொடர்புபடுத்தி முன்னரும் சில பத்திரிகைகள் சந்தேகங்கள் கிளப்பியிருந்தன.

1995 செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி நீர்கொழும்பு கடற்பகுதியில் அண்டநோவ் 32 விமானம் வீழ்ந்தது. அதே கடற்பகுதியில் மற்றொரு அண்டநோவ் 32 விமானம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஈழப் போர் — 3இல் இழந்த விமானங்கள்




| | | | | |
|---|---|---|---|---|
| 1 — | அவ்ரோ | — 1995 | ஏப்ரல் | 28 இல் |
| 2 — | அவ்ரோ | — 1995 | ஏப்ரல் | 29 இல் |
| 3 — | புக்காரா | — 1995 | ஜூலை | 14 இல் |
| 4 — | அண்டனோவ்32 | — 1995 | செப்ரெம்பர் | 13 இல் |
| 5 — | வை — 8 | — 1995 | நவம்பர் | 18 இல் |
| 6 — | அண்டனோவ்32 | — 1995 | நவம்பர் | 26 இல் |
| 7 — | எம். ஐ. 17 | — 1996 | ஜனவரி | 22 இல் |
| 8 — | பெல் 212 | — 1996 | டிசம்பர் | 7 இல் |
| 9 — | உளவுவிமானம் | — 1997 | ஜனவரி | 6 இல் |
| 10 — | வை - 12 | — 1997 | ஜனவரி | 20 இல் |
| 11 — | கிபிர் | — 1997 | ஜனவரி | 21 இல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# 91 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 24 – 02 – 1944

மறைவு: 07 – 11 – 1996

## அமரர் கனகு துரைராசா

எப்போது வருவீர் எங்களின் அப்பாவே!
தப்பென்ன செய்தீர் தரணியில் நீர் வாழ
தொண்ணூறு நாள்கள்
தொலைந்திங்கு போனதோ!
கண்ணில் ஈரம்
கனகனத்து வீழுதோ!
துன்பத்தின் மீதியால்
துவள்கின்றோம் ஐயா
இன்பம் இனி எப்போ வரும்?
இறையே நல் பதில் சொல்லும்.

உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் எமது உள்ளங்களில் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

பட்டினசபை வீதி,
மானிப்பாய்.

(9234)

## கமக்காரர் அமைப்புகள்

சண்டிலிப்பாய், பெப். 4

நல்லூர் கமநல சேவை கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவில் கிராம ரீதியாக ''கமக்காரர் அமைப்புகள்'' உருவாக்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் இந்த அமைப்புகள் மூலமே கமக்காரர்களுக்கான உள்ளீடுகள் வழங்கப்பட விருப்பதாக நல்லூர் கமநல சேவை கேந்திர நிலையை பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி. பாமா கந்தப்பு தெரிவித்தார். (ஐ-135)

## கிளிகளால் தொல்லை

நவாலி, பெப் 4

ஆனைக்கோட்டை, நவாலி வழுக்கையாறு பகுதி வயல்களில் கிளிகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

கூட்டம் கூட்டமாக வரும் கிளிகள் நெற்கதிர்களை அறுத்து நாசப்படுத்துகின்றன. இதனால் விவசாயிகள் காலை முதல் மாலைவரை தமது வயல்களில் காவலில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது.

இதே வேளை, இப்பகுதிகளில் நெல் அறுவடையும் ஆரம்பமாகியுள்ளது. (ஐ-100)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி செல்வி க. சாமந்தியின்
அருமைத் தந்தை

### திரு. இ கனகராஜா

அவர்களின் மறைவை ஒட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆண்டு 9 C மாணவிகள்
**யா/ வேம்படி மகளிர்கல்லூரி.**

(45082)

உ

## சாரதி, மெக்கானிக் தேவை

லேலன்ட் லொறி ஓடக்கூடிய அனுபவமுள்ள சாரதியும், டீசல் மெக்கானிக்கும் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**சிவலிங்கம் மோட்டோர்ஸ்**
**77, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(45079)

# காணாமற் போன விமானங்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1995 நவம்பர் 22 ஆம்திகதி வீழ்ந்தது.

அவை புலிகளால் தாக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகங்கள் கிளப்பப்பட்டன. இயந்திரக் கோளாறே காரணம் என்று பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது. புலிகள் அவற்றுக்கு உரிமை கோரவில்லை.

### ஹெலி வீழ்ந்தது

அதேவேளை 1995 ஜனவரி 22 ஆம் திகதி எம். 17 ஹெலிக்கொப்டர் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. புலிகள் உரிமை கோரினர். ஆனால் ஹெலிக்கொப்டர்புலிகளால் கடநதப்பட்டதாகஒரு வதந்தியும், ஹெலிக்கொப்டரில் சென்ற படையினர் புலிகளின் பிடியில் உயிரோடு இருப்பதாகவும் சில ஆங்கிலப் பத்திரிகைகள செய்தி வெளியிட்டன

அப்படியானால் சுடப்படாமல் விமானங்கள் விழுவதற்கு என்ன காரணம்?

இயந்திந்திரக் கோளாறு மட்டும்தான் காரணம் என்று சொல்வது பாதிதான் மெய்.விமானிகளின் அனுபவமின்மையும், பதற்றமும் ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையும் படை அதிகாரிகளும் சென்ற ஹெலிக்கொப்டர் தரையிறங்கியது தொடர்பான விசாரணைகளில் பெறப்பட்ட தகவல் என்ன?

ஹெலிக்கொப்டரில் வழமையாக ஏற்படும் சிறு இயந்திரக் கோளாறுதான் ஏற்பட்டது. ஆனால் விமானி பதற்றமாகி பயந்துபோய் திடீரென்று தரையிறக்கி விட்டார். பறந்து கொண்டே அந்தக் கோளாறை சீர் செய்து கொண்டு சென்றிருக்கலாம் என்பது தெரியவந்துள்ளது.

ஒரு ஹெலிக்கொப்டரில் ஏற்படும் சிறு கோளாறு கூட சீர்செய்ய முடியாததாக உள்ளபோது, நவீன தொழில் நுட்ப விமானங்களில் ஏற்படும் கோளாறுகளை எப்படிச் சீர்செய்யப் போகிறார்கள்?

விமானிகளின் பதற்றத்துக்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று: போதிய பறப்பில் ஈடுபட்ட அனுபவமின்மை.

இரண்டு: ஏற்கனவே விமானங்கள் வீழ்ந்திருப்பதால் ஏற்படும் நம்பிக்கையீனங்கள் தரும் அச்சம்.

### கிபிருக்கு நடந்தது என்ன?

உதாரணமாக கிபீர் விமானத்தைச் செலுத்திய விமானிக்கு விமானத்தில் இயந்திரக்கோளாறு ஏதோ ஏற்பட்டதாகத் தெரிந்துவிட்டது. உடனே அவரது நினைவில் இயந்திரக் கோளாறை சீர் செய்வதை விட, முன்னரும் விமானங்கள் விழுந்த நினைவுதான் மனதில் தோன்றியிருக்கும். அதனால் உடனடியாக தான் தப்பிக்கொள்வதற்கு உரிய வழியைத் தேடியிருக்கலாம். அதனால் உயிர்தப்பி தரையிறங்கிவிட்டார்.

கிபீர் விமானம் தாக்கப்படவில்லை என்பதற்கு மற்றொரு ஆதாரம் அது வெடிக்காமல் கடலில் வீழ்ந்துள்ளது. சுடப்பட்டிருந்தால் வானத்தில் வெடித்துச் சிதறியிருக்கும். கடலில் அதன் பாகங்கள் விழுந்திருக்கும்.

விமானத்தில் பறவை மோதியதாக சொல்லப்படுகிறது. அது எந்தளவுக்கு சாத்தியம் என்பது கேள்விதான். ஒரு பறவை மோதினால் தடுமாறும் அளவுக்கு பலவீனமானதல்ல கிபீர் விமானம் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### உளவு விமானத்துக்கும் அதே கதியே!

அதேபோல ஆளில்லாத உளவு விமான விடயத்திலும் தொழில் நுட்பக் கோளாறு என்பது அதனை வழி நடத்தியவர்கள் செய்த தவறால் ஏற்பட்டிருக்கலாம்.

ஆளில்லாமல் பறந்த விமான விடயத்தில் புலிகளும் முதலில் கொழும்பில் வெளியான செய்திகளையே கூறினர். பூநகரிப் பகுதியில் தான் அந்த விமானம் தரையோடு மோதி விழுந்தது என்று 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

ஆனால் தற்போது கிடைத்துள்ள தகவல்கள அந்த உளவு விமானம் பாக்கு நீரிணைக் கடலில் விழுந்துள்ளதாக தெரிவித்துள்ளன.

ஆளில்லாமல் பறக்கும் உளவு விமானத்தில் இரண்டு வகை உள்ளன.

ஒன்று, பறந்து கொண்டே கீழே உள்ள நடமாட்டங்களைப் படம் பிடித்துக் கொண்டு திரும்பிவரும்.

இன்னொரு ரகம் - அது படம் பிடித்துக் கொண்டிருக்கும்போதே, பிடிக்கப்படும் படங்களை உடனுக்குடன் குறிப்பிட்ட தொடர்பு மையத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கும்.

எனினும், கீழே ஒரு வாகனம் செல்லுமானால் அதன் உள்ளே இருப்பவர்களின் முகங்களையெல்லாம் துல்லியமாகப் படம்பிடிக்கும் என்பது உண்மையல்ல. அது தவிர உருமறைப்புச் செய்யப்பட்ட முகாம்களை அதனாலும் கண்டுபிடிக்க முடியாது. காட்டுப் பகுதிகளுக்குள் உள்ள நடமாட்டங்களையும் துல்லியமாக இனம் காண இயலாது.

அதாவது நம்நாட்டு போர்ச் சூழலுக்கு மத்திய கிழக்கு போர் முனைகளில் உபயோகமான போர் விமானங்களோ, உளவு விமானங்களோ கூடுதல் பயனளிக்க மாட்டா.

எனினும் படையினரின் உற்சாகத்தை அதிகரிக்கச் செய்ய நவீன தொழில்நுட்ப விமானங்கள் வாங்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் அனுபவம் பெற்று விபத்தில்லாமல் கையாள நீண்ட காலம் தேவைப்படும்.

### கப்பல் தேடும் முயற்சியிலேயே விமானங்கள் ,அவுட்'

புலிகளின் ஆயுதக் கப்பலை தேடும் முயற்சியிலேயே உளவு விமானமும், வை 12 விமானமும் விழுந்துள்ளன.

பாரிய தாக்குதல்களுக்கும் பின்னர் புலிகள் தமது ஆயுதக் கப்பலை தருவிப்பது வழக்கம் என்ற ஊகத்தில் தான் அந்த சந்தேகம் எழுந்திருக்கலாம்.

ஆனால் இந்தியக் கடற்படையும், இலங்கைக் கடற்படையும் மிக விழிப்பாக இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை கடற்பகுதிக்குள் தமது ஆயுதக்கப்பலை புலிகள் தருவிக்கமாட்டார்கள்.

அதுதவிர, கப்பல் வருகிறது என்று செய்தியைச் சொல்லி விட்டு தேடத் தொடங்குவதால், அப்படிக் கப்பல் உண்மையாக புறப்பட்டிருந்தாலும் இடைவழியே திரும்பிச் சென்றுவிடும். தகவல் தொடர்பு சாதனம் மூலம் செய்தி பறந்துவிடும்.

படையினரின் நோக்கம் புலிகளின் ஆயுதக் கப்பலை மடக்குவதா? அல்லது ஆயுதக் கப்பலை தருவிக்கும் எண்ணம் புலிகளுக்கு இருந்தால் அதனை புலிகள் கைவிடச் செய்வதா? என்பது ஆராயப்பட வேண்டியது என்று தோன்றுகிறது. ★

— நன்றி:- தினமுரசு

# நீங்காத நினைவினில் நான்காண்டு



காரைநகர் வாரிவளவு

## இராமு. சண்முகம் பேரம்பலம்

(பிரபல வர்த்தகர்)
(இ. ச. பேரம்பலம் அன் கோ)
E. S. P. & Co.

அன்னை மடியில்: **26 – 4 – 1926**

ஆண்டவன் அடியில்: **19 – 1 – 1993**

அன்புறு சிந்தையொடு
அகமகிழ்ந்து வாழ்வு தந்த
என்னரும் நலத்தினான்
என்னருமை தந்தையே!
எப்பிறப்பிற் சந்திப்போம்?

பாசத்தின் உறைவிடமே. பண்பு நிறை பேருருவே,
மாசற்ற மனமுடையாய் மறைந்ததேன் மாமணியே?
நீர் இல்லா உலகினிலே நின்மதி இல்லை ஐயா!
சிரித்த நின் முகம நித்தமும் காண்கின்றோம்.
எம் தொழிலிடத்தில் உம் திருமுகம் நித்தமும் ஜொலிக்குதையா.
உம் நினைவும் எங்கள்கனவும் ஒருகனியாய் தூங்குதையா!
நான்காண்டு சென்றிடினும் மாறாது உம் பாசம்
பல ஆணடு சென்றிடினும் மாறாதையா உம் நினைவு,
இருப்பினும் இறைவனிடத்தில் நீங்கள் இணைந்திட
இறைவனை இறைஞ்சுகின்றோம் ஐயாவே!

உங்கள் பிரிவால் துயருறும்:
**அன்பின் துணைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

E. S. P. & Co.
505254,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(45068)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★பிரதமர்களாவதைத் தடுக்கக் கோரும் மனு:

# பெனாசீர், நவாப்ஷெரீப், இம்ரானுக்கு நீதிமன்றம் நேற்று அழைப்பாணை!

இஸ்லாமாபாத், பெப். 4

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்களும் முக்கிய மூன்று அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுமான பெனாஸிர் பூட்டோ, நவாப் ஷெரீப், மற்றும் இம்ரான்கான் ஆகியோரை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நீதிமன்றில் ஆஜராகுமாறு பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்தது.

மும்முனைப் போட்டியின் மத்தியில் தேர்தல் வாக்களிப்பு நடைபெற்ற நேற்றைய தினம் இந்த நீதிமன்ற அறிவிப்பு வெளியானது.

இம்மூவரும் நாட்டின் பிரதமர்களாவதைத் தடுக்கக் கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் மீதே உயர் நீதிமன்றம் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

பெனாஸிர் பூட்டோவும், நவாப் ஷெரீப்பும் நிதி தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுக்களையும் —

பிரபல கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுகளையும் நீதிமன்றில் எதிர்நோக்கியுள்ளனர். (ஐ-5)

## பிரான்ஸ் தீவு ஒன்றில் தொடர் குண்டு வெடிப்பு

பாரிஸ், பெப். 4

பிரான்ஸ் நாட்டில் எஸ். எல். என். ஜி. என்ற பிரிவினைவாதக்குழு கடந்த ஞாயிறன்று நான்கு முதல் ஐந்தரை மணிநேர இடைவெளிக்குள் கோர்சிகா தீவிலுள்ள சிறு நகரங்கள் மற்றும் கிராமப் புறப்பகுதிகளில் 56 குண்டுகளை வெடிக்க வைத்தது.

இதன் மூலம் அந்த அமைப்பு கடந்த இரு ஆண்டுகளாக நிறுத்திவைத்திருந்த தனது தாக்குதல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இக்குண்டு வெடிப்புக்களில் மக்கள் எவரும் இறக்கவோ காயப்படவோ இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## பெல்கிரேட்டில் ஆர்ப்பாட்டத்தை தடுக்க பொலீஸார் தடியடி!

பெல்கிரேட், பெப். 4

சேர்பியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலீசார் மேற்கொண்ட தடியடிப் பிரயோகத்தில் குறைந்தது 40 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவரும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சேர்பியாவில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் முடிவுகளை அரசு நிராகரித்ததைத்தொடர்ந்து கடந்த நவம்பர் மாதம் முதல் சேர்பியாவில் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. (உ-10)

## உலக அரங்கில்

### மசூதியில் நெரிசலில் ஐவர் பலி

தெஹிரான், பெப். 4

ஈரானில் மசூதி ஒன்றில் கடந்த சனியன்று மாலை நடந்த தொழுகையில் கலந்து கொண்ட யாத்திரிகர் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ஐந்து பேர் உயிரிழந்தனர். 44 பேர் காயமடைந்தனர். (ஐ-10)

## 800 புறாக்கள் பங்குபற்றிய மாபெரும் பறத்தல் போட்டி

### முதலிடத்துக்கு ரூ.110 இலட்சம்

ஜொகன்னஸ்பேர்க், பெப். 4

உலகில் மிகப்பெரிய அளவில் புறாக்களைப் பறக்கவிடும் போட்டி ஒன்று தென் ஆபிரிக்காவில் நடைபெற்றது சுமார் 800 புறாச் சொந்தக்காரர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர்.

பத்துமணி நேரம் தொடர்ந்து பறந்து குறித்த இலக்கை அடைந்து வெற்றியீட்டிய புறாவுக்கு 110 இலட்ச ரூபா பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

சவூதி அரேபிய இளவரசர் அப்துல் ரகுமான் அல் பைசல் உட்பட முக்கிய பல உலகப் பிரமுகர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். (ஐ-10)

## பாக். தேர்தல் முடிவுகள் இன்று

இஸ்லாமாபாத், பெப். 4

பாகிஸ்தானில் நேற்றுப் பொதுத்தேர்தல்கள் நடைபெற்றன.

நாடாளுமன்றத்தின் 217 ஆசனங்களுக்கும் நான்கு சட்டசபைகளுக்கான 483 ஆசனங்களுக்கும் தேர்தல்கள் நடைபெற்றன.

இத்தேர்தல்களில் முன்னாள் பிரதமர்களான பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான்மக்கள்கட்சிக்கும் நவாப் ஷெரீப்பின்முஸ்லிம்லீக் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகின்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான் கானின் கட்சியும் களத்தில் உள்ளது.

இது கடந்த 9 ஆண்டுகளில் பாகிஸ்தானில் நடைபெறும் நான்காவது பொதுத்தேர்தலாகும்.

நவாப் ஷெரீப்பின் முஸ்லிம் லீக்கின் கட்சிக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகமுள்ளதாகக் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இன்று இரவுக்குள் பெரும்பாலான முடிவுகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

### மதகுரு படுகொலை

றுவாண்டாவில் கத்தோலிக்க ஆலயம் ஒன்றில் திருப்பலியை நிறைவேற்றிக் கொண்டிருந்த ஆபிரிக்க வேதபோதக சபையைச் சேர்ந்த நைஸ்நாத் என்ற குருவானவர் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டார்.

இத்தகவலை புனிதபாப்பசர் வத்திக்கானில் புனித இராயப்பர் தேவாலயத்தில் நடந்த பிரார்த்தனை கூட்டத்தின் போது வேதனையுடன் அறிவித்தார். (ஐ-10)

# தென்மராட்சி, தீவுப் பகுதிகளில் காய்ச்சல் வேகமாகப் பரவுகிறது!

யாழ்ப்பாணம், பெப். 4

குடாநாட்டில் தீவுப்பகுதிகளில் தற்போது காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் காய்ச்சல் நோயினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள பலர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

தீவுப் பகுதியின் பிரதான ஆஸ்பத்திரியான ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளரில் 90 வீதமானவர்கள் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சிசை பெறும் நோயாளர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் தற்போது ஆஸ்பத்தியில் தங்கி சிகிச்சை பெறுகின்றனர்.

இதேவேளை தீவுப்பகுதிகளில் நுளம்பின் பெருக்கமும் முன்னைய காலங்களை விட அதிகரித்துள்ளது.

நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரை அங்கு மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நுளம்பின் பெருக்கத்தால் மலேரியாக் காய்ச்சல் பரவும் அபாயமும் அங்கு ஏற்பட்டுள்ளது.

காய்ச்சல்தீவிரமாகப் பரவி வரும் இவ் வேளையில், தீவுப்பகுதிகளுக்கான பிரதான ஆஸ்பத்திரியாக விளங்கும் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் ஒரே ஒரு டாக்டரே பணியாற்றி வருகிறார்.

இதேவேளை —

சாவகச்சேரிப் பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் தொகை கடந்த டிசம்பர் மாதத்தைவிட இம்மாதம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரிஆஸ்பத்திரியில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஆயிரத்து271 பேர் அண்மையில் இரத்தப் பரிசோதனை செய்துள்ளனர்.

தென்மராட்சியின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த மாதம் பெய்த அடைமழையினால் வெள்ளம் ஏற்பட்டதாலும் இவ்வெள்ளம் தேங்கியுள்ள பகுதிகளில் நுளம்பு உற்பத்தி அதிகரிப்பினாலும் காய்ச்சல் வேகமாகப் பரவக் காரணமாக இருக்கலாமென வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. ([illegible])

## பருத்தித்துறை, சாவகச்சேரிக்கு விரைவில் தொலைபேசி வசதி

யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரி, தீவுப்பகுதி ஆகிய இடங்களில் உள்ள பிரதம தபாலகங்களுக்கு தொலைபேசி வசதி விரைவில் கிடைக்கவுள்ளது.

இந்தப்பகுதியில் உள்ள மக்கள் தொலைபேசி வசதியைப் பெறுவதற்காக யாழ். நகருக்கு வருவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

றேடியோ வயலர்ஸ் மூலம் வழங்கப்படவுள்ள இந்த வசதி மாத இறுதிக்குள் செயற்படத் தொடங்கும் என்று 'ரெலிக்கொம்' அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டனர். (உ-3)

## சந்திரிகாவிடம் அவரின் பிள்ளைகள் கேட்ட கேள்வி

''இந்த நாட்டில் அதிகரித்து வரும் பாலியல் குற்றங்கள் குறித்து பத்திரிகையில் படித்துவிட்டு, 'உங்கள் அரசு இதற்கு என்ன செய்கிறது?' என்று எனது மகளும், மகனும் என்னிடமே கேள்வி கேட்கிறார்கள்,'' –இப்படிக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி, நாட்டில் பரவலாக அதிகரித்து உள்ள துர்நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கூறினார். (உ-5)

## தொலைபேசிக் கட்டணம் குறித்து அதிகாரி விளக்கம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் தொலைத்தொடர்பு நிலையங்களில் வெளிமாவட்டங்களுக்கான அழைப்புக்களுக்கு முதல் மூன்று நிமிடங்களுக்கு முப்பது ரூபாவுக்கு மேற்படாமலும் —

அடுத்த ஒவ்வொரு மூன்று நிமிட வேளைகளுக்கும் இருபது ரூபாவுக்கு மேற்படாமலும் கட்டணம் அறவிடலாம்.

இதற்குக்கூடிய தொகைக்கு கட்டணம் அறவிடக் கூடாது.

—இவ்வாறு 'ரெலிகொம' நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்குக் கூடியதொகையை ஏதேனும் தொலைத்தொடர்பு நிலையம் அறவிட்டால் அது குறித்து 'ரெலிகொம்' நிறுவனத்துக்கு பொதுமக்கள எழுத்து மூலம் முறைப்பாடு செய்யலாம் என்றும் —

அத்தகைய முறைப்பாடுகள் குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-3)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி இராசம்மா கதிரவேற்பிள்ளை

திதி: 04 - 02 - 97

எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி கு. சண்முகதாஸ்**

அவர்களின் தாயாரின் மறைவின் ஓராண்டினை நினைவு கூரும் இந்நாளில் அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (9224)



## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சிப் பிரதேச செயலரும்
நலன்புரிச் சங்க போஷகருமாகிய

**திரு. புண்ணியர் சுந்தரம்பிள்ளை**

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி புண்ணியர் சின்னத்தங்கம்

31-01-97இல் வன்னிப் பிரதேசத்தில் இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தெனமராட்சிப் பிரதேச செயலக
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
தென்மராட்சி, சாவகச்சேரி

பிரதேச செயலகம்,
சாவகச்சேரி. 3-2-1997. (சி-53)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பொது நூலகம்

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

பாவித்த, புதிய ஆர்மோனியங்கள், ஓர்கன்கள் (Organs) விற்பனைக்கு உண்டு. முகவரி:- 238, கோயில் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். வாரநாள்களில் 2 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். (45042)

**SPOKEN ENGLISH**

சுலபமான முறையில் ஆங்கிலம் கதைக்கப் பயில, (சிறு குறாப்பாக) ஆசிரியர்: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி (M. L. S.) Lond, 426, ஜெயந்தி ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன் சந்தி) (45070)

**தவறிவிட்டது**

நாகேந்திரம் அருள்குமார் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும் (இல. 0906003149), பாடசாலை அடையாள அட்டையும் சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யா/மகாஜனக் கல்லூரியில் (மருதனார்மடம்) ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (45072)

## யாழ். மாநகர ஆணையாளர் புதுடில்லிக்கு

யாழ்ப்பாணம், பெப் 4

யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் புலமைப் பரிசில் திட்டத்தில் கீழ் இந்தியத்தலைநகர் புது டில்லியில் இரு மாதகால நகர அபிவிருத்தி நிர்வாகம் தொடர்பான பயிற்சியைப் பெறுவவற்காக கடந்த வாரம் அங்கு பயணமானார்

அவர் நாடு திரும்பும் வரை பதில் ஆணையாளராக மின் பொறியியலாளர் திரு. வே. நவரத்தினராசா கடமையாற்றி வருகின்றார். (அ-135)

## பனங்கள்ளு விலை குறைப்பு

தென்மராட்சி, பெப். 4

பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தவறணைகளில் பனங்கள்ளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு போத்தல் கள்ளின் கொள்வனவு விலை 7 ரூபாவாகவும் —

விற்பனவு விலை 11 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

பனங்கள்ளின் உற்பத்தி அதிகரித்திருப்பதே இந்த விலைக் குறைப்புக்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## அராலியில் கசிப்பு விற்க முற்றாகத் தடை

அராலி, பெப். 4

அராலி மேற்கு, அராலி மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குள் அடங்கும் கோட்டைக்காடு கிராமத்தில் கசிப்பு விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இப்பகுதியில் உள்ள சில வீடுகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 20 போத்தல் கசிப்பு கிராம உத்தியோகத்தரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

நவாலி, சங்கானை, மூளாய் பகுதிகளில் இருந்து கோட்டைக்காடு கிராமத்துக்கு கசிப்பு எடுத்து வருவதைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவ அப்பகுதி இளைஞர்கள் சிலர் முன்வந்துள்ளனர். (ஐ-12)

---


வடமராட்சி வாழ் விவசாய நண்பர்களே!

**உங்களுக்கு தேவையான தரமான**

விவசாய இரசாயனங்கள், தெளிகருவிகள்
வீட்டுப் பாவனைக்குரிய கிருமிநாசனிகள்
விவசாயம் சம்பந்தமான ஆலோசனைகள்
பெற்றுக்கொள்ள எம்மிடம் வாருங்கள்

முகவரி:

**துர்க்கா** சந்தைப்படுத்தும் சேவை

தாமரைக்குளம் துன்னாலை, கரவெட்டி.

**உங்கள் தேவை எங்கள் சேவை.**

(45071)


# I. I. S.

**INSTITUTE DAY 1997**

**CONGRATULATIONS**

Our Congratulations to the award Winners of the above ceremony.

**STUDENTS' UNION**
INSTITUTE OF INFORMATICS STUDIES

(45075)

---


யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம்

வரைவுள்ளது

"கூட்டுறவு தையலகம்"

எம்மால் புதிதாக எமது தலைமையலுவலகத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கூட்டுறவுத் தையலகத்திற்கு தையல் வேலைகளில் நன்கு அனுபவமுள்ள இரு பாலார்களும் உடன் தேவைப்படுகின்றனர். நேரிடையாகச் சமுகம் தரவும்.

**பொது முகாமையாளர்.**

யாழ். ப. நோ. கூ. சங்கம் - வ. து.,
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/52)


---

# 28 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

## ★ கார்த்தி கதிர்காமநாதன் ★

கைதடி முருகன் துணை கொண்டு,
கைதடிச் சந்தியை வசிப்பிடமாக கொண்ட **கார்த்தி** தம்பதிகளின் மகன் **கதிர்காமநாதன்**, சுவிற்சலாந்தில் தனது 28 ஆவது பிறந்த நாளை இன்று (04 - 02 - 1997) செவ்வாய்க்கிழமை தமது நண்பர்களுடன் கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா, இராசாத்தி அக்கா, ஸ்ரீஸ்கந்தராசா அண்ணா, தங்கராணி அண்ணி, மற்றும் சித்தப்பாமார், சித்திமார், டென்மார்க்கில் வசிக்கும் இராஜேந்திரம் அத்தான் ஆகியோர் பல்லாண்டு காலம் வாழ என வாழ்த்துகின்றார்கள்.

(45049) - குடும்பத்தினர்

---

யா/ சந்திரபுர
ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்
மட்டுவில்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**1996 ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்**

சித்தியடைந்த 07 மாணவர்களையும், அவர்களின் சித்திக்கு வித்திட்ட அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | மொத்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | T. ஜெய்சுந்தர் | 135 |
| 2. | T. செந்தூரன் | 111 |
| 3. | T. அஜந்தன் | 109 |
| 4. | S. தயானந்தன் | 108 |
| 5. | S. யசிந்தன் | 105 |
| 6. | R. ஈவிதா | 101 |
| 7. | M. குலதீபன் | 100 |

பாடசாலை அபிவிருத்திச் சபை,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி.
மட்டுவில். (45077)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 03 | 05 |
| — | — |
| 10 | 01 |
| — | — |
| 1928 | 1997 |

## அமரர் செல்லையா சிதம்பரநாதன்

(சின்னத்துரை கடை உரிமையாளர்)

விடிவெள்ளி யாக வீட்டினிலே மிளிர்ந்தீரே
நொடிப் பொழுதும் எம்நினைவில் வாழ்ந்தீரே
கடினமன மில்லாது காசினியில் திகழ்ந்தீரே
உமைப்பாகன் அழைப்பால் எமையகன்று
சென்றீரோ!

சாந்தி! சாந்தி! சாந்தி!

எமது குடும்பத்தலைவரின் திடீர் மறைவை அறிந்து வருகை தந்து எமது துன்பத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் பலவழிகளிலும் உதவிகளை நல்கிய அன்பான இதயங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (04 - 02 - 1997) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நீங்காத நினைவினிலே:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

முகவரி:
9/6, மலர் மகள் வீதி,
அரியாலை. (45062)

---

உ
சிவமயம்

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு



**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான தாதுவருஷம் தை மீ 23 ஆம் நாள் (05-02-97) நாளை புதன்கிழமை காலை 9-00 — 11-10 மணி வரையுமுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்,

**எங்கள் சிரேஷ்ட புத்திரி திருவளர்ச் செல்வி**

## ★ சிவரஞ்சினி ★

அவர்களுக்கு பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. த. புஸ்பராசா
(உரிமையாளர், நியூலீலா ஸ்ரோர்ஸ், ராஜிகா ஸ்ரோர்ஸ்)
திருமதி பு. விஷ்ணுதேவி

கைதடி மத்தி, கைதடி.



(45078)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உதாரணமாகக் கொள்க

“ராகிங்” எனப்படும் பகிடிவதையில் ஈடுபடும் மாணவருக்கு சிறைத் தண்டனை வழங்குவதற்கு தமிழகத்தில் சட்டம் வரவுள்ளது!. இதற்கான சட்ட மூலம் தமிழக சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

இதுவரை நிர்வாக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனற்றவையாகக் காணப்பட்டன. அதனாலேயே ‘பகிடிவதை’யில் ஈடுபடுவோரை சட்டத்தின் மூலம் தடுக்க இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது — என்று தமிழகக் கல்வி அமைச்சர் சட்ட மூலத்தைச் சமர்ப்பித்துப் பேசுகையில் தெரிவித்திருக்கின்றார்.

தமிழகத்தில் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அதிகம். அதனை விடவும் அதிகம் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை. பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றி பல்கலைக்கழகக் கல்லூரிகளிலும் பகிடிவதை அங்கு மிக மோசமாக நடப்பதுண்டு.

ஆகையால், மாணவர்களின் பகிடிவதைக் குற்றம் தமிழகத்தில் நீண்டகாலமாக மிகவும் பாரதூரமானதாகவும், சமூகத்தில் பெரும் தாக்கத்தைக் கொடுப்பதாகவும் இருந்து வருகின்றது.

இலங்கையில் பல்கலைக் கழகங்கள் குறைவுதான். பட்டதாரிப் படிப்புக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் கல்லூரிகளும் இல்லை. எனினும் பகிடிவதைச் சித்திரவதையின் ‘‘தரம்’’ மட்டும் இலங்கையில் தமிழகத்தைவிடக் குறைந்தது என்று சொல்லிவிட முடியாது!

ஏன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூத்த மாணவர்கள். அனுமதி பெற்றுச் செல்லும் புதிய மாணவர்களைச் சித்திரவதை செய்யும் ‘‘தரம்’’ மட்டும் என்ன குறைவா? இவற்றில் ஈடுபடும் மாணவர்கள் தாம் பொதுவான சமூகத்தைவிட வேறுபட்டவர்கள் என்ற எண்ணத்தில் கொட்டமடிப்பதும், புதிய மாணவர்கள் பல்கலைக்கழகப் படிப்பே வேண்டாம் என்று மன உளைச்சல் கொள்ளுமளவுக்கு மோசமான நிலைக்குச் செல்வதும் ஒன்றும் பரம இரகசியங்கள் அல்லவே.

புதிய மாணவர்களாக இருந்தவேளை தாம் சித்திரவதைக்கு ஆளாகி மனம் நொந்தவர்களே, இரண்டொரு வருடங்களில் தாம் அனுபவித்ததைவிட மோசமான சித்திரவதைகளை, தொல்லைகளைப் புதிய மாணவர்கள் மீது கட்டவிழ்த்து விடுகின்றார்கள்.

ஆகவே பகிடிவதை ஒரு சுழல் சக்கரமாக வருடாந்தம் வீச்சும் வேகமும் கூடியதாகத் தொடர்கின்றது. நிர்வாக மட்டத்தில் அதனைத் தடுக்க முடியவில்லை; அது மிகவும் கஷ்டம் என்பதே பல்கலைக்கழக நிர்வாகங்களின் அனுபவமாகிவிட்டது,

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்ற நிலைக்கு வந்துவிட்ட பகிடிவதையைத் தடுப்பதற்கு தமிழகத்தைப் பின்பற்றுவதே நல்லது. மனித பண்பாட்டுக்குக் களங்கமாக மாறிவிட்ட அதனை முன்னுதாரணமாகக் கொண்டு பல்கலைக் கழகங்களில் மட்டுமன்றி, சகல கல்வி நிலையங்களிலும் பகிடிவதையைத் தடுக்க உடனடியாக ஆவன செய்யவேண்டும்,

# உள்ளூராட்சித் தேர்தலின் பின்பே இனி தெரிவுக்குழு நடவடிக்கைகள்

கொழும்பு, பெப். 4

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்தும் அரசமைப்புத் திருத்தம் குறித்தும் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு தனது நடவடிக்கைகளை உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்பே மீண்டும் ஆரம்பிக்கும்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ. தே. கட்சி உட்பட சிறுபான்மை தமிழ், முஸ்லிம் சட்சிகள் தெரிவுக்குழு நடவடிக்கையை தேர்தல் முடியும் வரை ஒத்திப்போடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளமையால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும்—

புதிய அரசமைப்புச் சட்டத்தின் 14 ஷரத்துகள் குறித்து ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

அதிகாரப் பரவலாக்கல் விவகாரம் உட்பட ஏனைய விடயங்கள் உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் ஏப்ரல் மாதத்தில் மீண்டும் தெரிவுக்குழு கூடும் போது ஆராயப்படும் எனவும் —

அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (உ–5)

## மகாராணியின் மருமகளுக்கு
## சிலுவையுடன்சங்கிலி பாபா வழங்கினார்!

புதுடில்லி, பெப். 4

பிரிட்டிஷ் எலிஸெபத் மகாராணியின் முன்னாள் மருமகளான சரா பேர்குஷனுக்கு பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா தனது அருளினால் சிலுவைச் சின்னம் பொருந்திய தங்கச் சங்கிலியை அந்தரத்திலிருந்து வரவழைத்து வழங்கினார்.

‘ரோய்ட்டர்’ செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டது.

எலிஸெபத் மகாராணியின் இரண்டாவது மகனான அண்ட்ரூவை பிரபுத்துவ வம்சத்தைச் சேர்ந்த சாரா பேர்குஷன் திருமணம் செய்ததும்

பின்னர் அத்திருமணம் விவாகரத்தில் முடிந்ததும் தெரிந்தவையே.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா வந்திருந்த சாரா பேர்குஷன் தனது ஹோமியோபதி டாக்டரான — மலையாளத்தைச் சேர்ந்த — ஐசாக் மத்தாய் என்பவருடனும் அவரது மனைவியுடனும் சென்று சத்ய சாயி பாபாவைத் தரிசித்தார்.

அப்போதே பெருமளவிலான விபூதியையும், தங்கச் சங்கிலியையும் பாபா அந்தரத்தில் இருந்து உருவாக்கி அருளினார் என ஐசாக் மத்தாய் கூறினார்.

சிலுவை பொருந்திய சங்கிலியை அருளியதன் மூலம் தாம் சகல மதங்களுக்கும் பொதுவானவர் என்பதை பாபா வெளிப்படுத்தியுள்ளார் என்றும் —

பாபாவைத் தரிசித்த பின்னர் சாரா பேர்குஷன் மன அமைதி மற்றும் மகிழ்ச்சியுடன் இருக்கின்றார் என்றும் —

ஐசாக் மத்தாய் மேலும் கூறினார். (உ–150)

## கூட்டுறவுச் சங்கக்கடையில் பெருமளவு பொருள்கள் கொள்ளை

கொழும்பு, பெப் 4

புத்தூர் கிழக்கு கூட்டுறவுச் சங்கக் கடை ஒன்றில் பெருந்தொகையான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த 31ஆம் திகதி இரவு 8.00 மணிக்கும் 9.00 மணிக்கும் இடையில் இச்சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இனந்தெரியாத நபர்கள் கூட்டுறவுச் சங்கக் கடையின் காவல்காரரை மரம் ஒன்றுடன் கட்டி வைத்துவிட்டு அங்கிருந்து 20 மூடைகள் அரிசி, 15 மூடைகள் மா, 17 மூடைகள் சீனி, 4 மூடைகள் பருப்பு, 4 பெட்டி பற்றறிகள், 55 லக்ஸ்பிறே பெட்டிகள், 20 அங்கர் பால்மா பெட்டிகள், 30 கிலோ தேயிலை, 15 பெட்டிகள் பற்பசை, 30 பெரிய பிஸ்கட் பெட்டிகள், 30 மிளகாய் மூடைகள், 3 பெரிய சவர்க்காரப் பெட்டிகள், 72 சம்போ பைக்கெற்றுக்கள் மற்றும் பல உணவுப்பொருள்கள் ஆகியவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரால் இது தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## அறிமுக விழா

வலிகாமம், தெற்கு பெப். 4

‘‘தூண்டி’’ இதழின் அறிமுகவிழா நாளை புதன் கிழமை பி. ப. 1 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதழின் அறிமுகவுரையை திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) நிகழ்த்துவார்.

கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி க. குணராசா ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

‘‘இளந்தலைமுறையின் வளர்ச்சிக்குத் தூண்டியாக அமைவது வாய்ப்பா... சியா?’’ என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெறும். (அ-152)

## நாளை

**தை 23**

**புதன்கிழமை**

திதி: திரயோதசி பின் இரவு 2.23 வரை.

நட்சத்திரம்: பூராடம் முன்இரவு 9.54 வரை.

பிரதோஷ விரதம்

ராகுகாலம்: 12.35- 2.05

[illegible] (பழைய நேரப்படி)

## சமய சந்நிதிகளில்

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

மகா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. (அ)

★ ★ ★

நல்லூர் சிவன் கோயிலில் நாளை புதன்கிழமை பி. ப. 3.30 மணிக்கு விசேட அபிஷேகம் பூசை வழிபாடுகளுடன் பிரதோஷவிரத விழா நடைபெறும். (அ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம் மடம் வீதியில் அமைந்துள்ள திரு இருதயநாதர் ஆலயத்தின வருடாந்த கொண்டாட்டங்கள் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின. ஒன்பது நவ நாட்கள் ஆராதனைகளைத் தொடர்ந்து 10 ஆம் திகதி மாலை திருநாள் திருப்பலி இடம் பெறும். (இ-51)

★ ★ ★

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் லூர்த்து மாதா தேவாலயக் கொடியேற்றத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பங்குத் தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் ஆரம்பமானது.

தொடர்ந்து ஐந்து தினங்கள் பூசைகள் இடம்பெற்று இன்று செவ்வாய்க்கிழமை திருப்பலிப்பூசை, திருச்சொரூப பவனியுடன் திருவிழா நிறைவு பெறும். (அ– 3)

★ ★ ★

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம், நாளை புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 18 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, வழிபாடுகளுடன் திருவிழா நடைபெறும்.

தேர்த்திருவிழா இம்மாதம் 21 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 22 ஆம் திகதியும் நடைபெறும். (அ -30)

## வைத்தியர் ராமசாமி காலமானார்

கொழும்பு, பெப். 4

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரபல ஆயுர்வேத வைத்தியரான இ. ராமசாமி பரியாரியார் (வயது 88) நேற்று முன்தினம் மாலை கொழும்பில் காலமானார். இவர் புகழ்பெற்ற கல்வியங்காடு வைத்தியப் பரம்பரையைச்சேர்ந்தவர். (உ-150)

## நாட்டின் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் தேசியக் கொடியை ஜனாதிபதி ஏற்றுவார். தொடர்ந்து நாட்டு மக்களுக்கு அவர் உரை நிகழ்த்துவார்.

பிரதமர், சபாநாயகர், பிரதம நீதியரசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதர்கள், இராஜதந்திரிகள் போன்றோர் இந் நிகழ்ச்சியில் பங்கு பற்றுவர்.

சகல அரசாங்க, தனியார் கட்டடங்களிலும் நேற்றும் இன்றும் தேசியக் கொடியைப் பறக்க விடுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கோரி இருந்தது. [உ–5]

## ஆசிரிய கலாசாலை அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 4

பலாலி ஆசிரிய கலாசாலைக்கு அனுமதி பெறும் ஆசிரியர்களுக்கானகடிதங்கள் கடந்த வாரம் அனுப்பப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை மூல ஆவணங்களுடன் நாளைகாலை 9மணிக்கு சமுகந் தருமாறு கலாசாலை அதிபர் கேட்டுள்ளார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் 1997 கல்வியாண்டில் 'அனுமதி பெறும் புதிய மாணவர்களுக்கான வகுப்புகள் நாளை ஆரம்பமாகவுள்ளன. (அ)

## மரக்கறிவிதை விநியோகம்

சண்டிலிப்பாய், பெப். 4

நல்லூர் கம நல சேவை கேந்திர நிலையத்தில் மலைநாட்டு மரக்கறி இனங்களான கோவா, லீற்ஸ், கரட், மிளகாய் மற்றும் கத்தரி. வெண்டி விதைகள் கையிருப்பில் இருப்பதாகவும் —

விவசாயிகள் இவற்றைச் சகாய விலையில் பெற்றுப் பயனடையுமாறும் பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி பாமா கந்தப்பு கேட்டுள்ளார்.

தென்னை உரம், உருளைக் கிழங்குக்கான உரம், ரி டி. எம் வி - 1 ஆகிய உரவகைகளும், நீர் இறைக்கும் இயந்திரத்திற்கான உதிரிப்பாகங்கள், அல்கத்தின் பைப் என்பனவும் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## படையினரின் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு மாத காலத்தில் இதே போன்ற ஷெல் தாக்குதல்களால் 10 அப்பாவித் தமிழர்கள் கொல்லப் பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## வவுனியா . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலைக்கு வந்த வண்ணம் இருந்தால் கப்பல் வசதி செய்து கொடுக்கும் வரை அவர்களையும் திருமலையில் வைத்துப் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் —

தற்போதிருக்கும் மூவாயிரம் பேரையே பராமரிப்பதில் சிக்கல் இருப்பதால், இவர்கள் அனைவரும் கப்பல் மூலம் வடக்கே புறப்பட்டுச் செல்லும் வரை வேறு எவரையும் திருமலைக்கு அனுப்ப வேண்டாம் என்றும் —

திருகோணமலையில் உள்ள அரச அதிகாரிகள் வவுனியாவில் உள்ள அதிகாரிகளுக்கு அறிவித்து விட்டனர்.

வவுனியா முகாம்களில் உள்ள அகதிகளைத் திருகோணமலைக்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலும் —

வவுனியாவுக்கு தொடர்ந்து அகதிகள் வந்து கொண்டிருப்பதாலும் —

வவுனியாவில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது; பராமரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் பணியும் திண்டாட்டமாகியுள்ளது.

இதற்கிடையில் —

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் நரோமா, தராகி, எண்டூரன்ஸ் ஆகிய மூன்று கப்பல்களும் உரிய திருத்த வேலைகளை முடித்துக் கொண்டு நேற்று மாலை திருகோணமலையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்படக்கூடிய தயார் நிலையில் இருந்தன. (உ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்படை அதிகாரி நியமனம்

கடற்படையின்பிரதம அலுவலக அதிகாரியாக கிழக்கு மாகாண கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் திஸநாயக்கா எதிர்வரும் 7 ஆம் திகதி பதவி ஏற்கிறார்.

கிழக்கு மாகாண கடற்படைத் தளபதியாக ஏ.ஆர். எம். ராஸிக் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-3-150)


## அச்சுக் கோர்ப்பாளர்

முன் அனுபவம் உள்ள அச்சுக் கோர்ப்பாளர்கள் தேவை. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். தொழில் அனுபவம், கல்வித் தகைமை, வயது ஆகியன உட்பட்ட முக்கிய விவரங்களுடன் 09-02-97 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தொழில் அனுபவத்திற்கேற்ப தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**முகாமையாளர் (ஆளணி),**
**"உதயன்"**
**292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**


## பாராட்டும் வாழ்த்தும்

03 - 02 - 97 ஆம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் கல்விவலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று பதவி உயர்வுடன் செல்லும் உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. சு. இரத்தினராசா அவர்களை**
**வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.**

**திரு. வி. பரிபூரணானந்த சர்மா,**
**திரு. ஐ. இராமசாமி,**
**திரு. ச. பிரணதார்த்திகர சர்மா.**

யா/ கந்தரோடை
தமிழ்க் கந்தையா வித்தியாசாலை,
கந்தரோடை. [சி/58]

## வாழ்த்துகின்றோம்

முதலாவது ஆண்டு விழாக்காணும்
**INSTITUTE OF INFORMATICS STUDIES**
JAFFNA, SRI LANKA.

பாரினில் பரிணமிக்க வாழ்த்துகின்றோம்.
வடமராட்சி தனில் பிறந்து, தளிர் நடைபயின்று
கல்லும் முள்ளும் கட்டாந்தரையும் கடந்து
பச்சைப்பசேல் என பரிணமித்து பளபளக்கும்
I. I. S. ஐ கணனி உலகினில் யாழ். நகரில்
ஒளிக்கதிராய் பரிணமிப்பதுடன் பலகலையிலும்
மென்மேலும் சிறப்புற்று ஒளி வீசிட வாழ்த்துகின்றோம்.

**இயக்குநர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள்,**
**Gnanothaya Institute Chundlkuli, Jaffna &**

**உரிமையாளர்:**

**Gnanoshyan Mulupa Towers,**
**Chundikuli Jaffna.**

(சி/57)

## THIRD DEATH ANNIVERSARY



**ALICE MUTHUMANEY ARIARATNAM**

BORN: 15 — 05 — 1916
CALLED TO GLORY: 04 — 02 — 1994

Many women do noble things but you surpass- them all.
A Woman who fears the Lord is to be praised.

Fondly Remembered by her
HUSBAND and LOVED ONES

"Melita"
707, Hospital Road,
Jaffna (44968)

## பணிப்பாளர் நியமனம்

உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக இதுவரை பணியாற்றி வந்த சு. இரத்தினராஜா யாழ். கல்வித் திணைக்களத்தின் வலயம் I கல்விப் பணிப்பாளராக நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் தழுவு அங்கீகாரத்தை எதிர்பார்த்து இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் —

இந்நியமனத்தை ஏற்பது குறித்து மாகாணக் கல்விப் பணிப்பாளர் மூலம் தகவல் தெரிவிக்கும்படியும் —

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-51-152)

## விவேகானந்தர் விழா

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜய நூற்றாண்டு விழா நாளை புதன் கிழமை மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திருமதி வ. பசுபதிப்பிள்ளை தலைமையில் காலை 9 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

''சுவாமி விவேகானந்தர் இன்றைய உலகுக்குத் தந்த செய்தி'' என்னும் பொருளில் பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுவார்.

கல்லூரி மாணவிகளின் பேச்சு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (அ- 100)

## நிறுவன தினம்

'இன்பொமெற்றிக்ஸ் ஸ்ரடிஸ்' நிறுவனத்தின் (ஐ. ஐ. எஸ்.) நிறுவனதினம் இன்று காலை 10-00 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலர் கலாநிதி கே. குணராஜாவும் அவரது பாரியாரும் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கணனி விஞ்ஞானப்பிரிவைச் சேர்ந்த எஸ். கனகநாதன், கலாநிதி ஆர். மகேசன், திருமதி ராஜா சிவசக்தி மகேசன் யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறைத் தலைவர் கே. தேவராஜன், வர்த்தகவங்கி முகாமையாளர் எஸ். ராஜீவன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (உ-5)

## விசேட அ. அட்டை

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த சில கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய விசேட அடையாள அட்டைகள் நாளை புதன் கிழமையிலிருந்து காலை 9.00 மணி தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

ஜே/70 கிராம சேவையாளர் பிரிவுக்கான அடையாள அட்டைகள் புதன்கிழமை கிராமசேவையாளர் பணிமனையிலும் —

ஜே/71, ஜே/72, ஜே/68, ஜே/69 கிராமசேவையாளர் பிரிவுகளுக்கான அடையாள அட்டைகள் வியாழக்கிழமை குருநகர் சனசமூக நிலையத்திலும் —

ஜே/83, ஜே/84 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய அடையாள அட்டைகள் வெள்ளிக்கிழமை கொட்டடி நமசிவாயம் மகாவித்தியாலயத்திலும் —

ஜே/82 கிராம சேவையாளர் பிரிவுக்குரிய அடையாள அட்டைகள் ஞாயிற்றுக்கிழமை கிராம சேவையாளர் பணிமனையிலும் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இணுவிலில் மகா கும்பாபிஷேகம்

வலிகாமம் தெற்கு, பெப் 4

சரித்திரப் பிரசித்தி பெற்ற இணுவில் ஸ்ரீ பரராச சேகரப் பிள்ளையார் கோயிலில் முப்பத்துமூன்று குண்ட உத்மோத்தம மகாயாக மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. வெள்ளிக்கிழமை பூர்ணாகுதியும், சனிக்கிழமை எண்ணெய் சாத்துதல் கிரியைகள் விசேடமாக இடம் பெறும் [அ-152-111]

# மரண அறிவித்தல்கள்

## வன்னித்தம்பி சுப்பிரமணியம்

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த வன்னித்தம்பி சுப்பிரமணியம் 28-1-97 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னித்தம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், சிவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கம், சின்னத்தங்கம், சின்னத்துரை (கணக்காளர், புகையிரத திணைக்களம்), இராசம்மா, கந்தசாமி (அரசாங்க நில அளவையாளர்), இரத்தினம் (உத்தரவு பெற்ற நில அளவையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 68/4 இராசாவின் தோட்டம், நல்லூர் இல்லத்திலிருந்து 29-1-97 புதன்கிழமை எடுத்துச் செல்லப்பட்டு திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
**இரத்தினம்**
(சகோதரன்)

மே/பா:- டாக்டர் சுப்பிரமணியம்
சூராவத்தை,
சுன்னாகம். [45073]

## சின்னக்குட்டி துரைசிங்கம்

இலங்கை மின்சார சபை, பருத்தித்துறை ஊழியரான சின்னக்குட்டி துரைசிங்கம் ஞாயிற்றுக்கிழமை (02 - 02 - 1997) காலமானார்,

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், சுரேஸ்குமார், ரமேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று திங்கட்கிழமை (03 - 02 - 1997) பூவரசந்திட்டி மண்டான் மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மகேந்திரன்**
(மருமகன்)

மண்டான்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி. (சி / 55)

## திரு. தம்பிஐயா நடராஜா (நடா)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் புனித யுவானியார் லேனில் வசித்தவருமான த. நடராஜா 03 - 02 - 97இல் காலமானார்.

இவர் யூலியற்றின் அன்புக் கணவரும், சத்தியேந்திரன் (லண்டன்), பத்மேந்திரன் (AL 97 மத்திய கல்லூரி மாணவன்), சங்கீதா (AL 97 தி கு. கன்னியர்மடம்), சிவேந்திரன், சஜித்தா, (ஜோண் பொஸ்கோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தம்பிஐயா - பூமணி ஆகியோரின் அன்பு மகனும், சிவராசா (ஜேர்மனி), வசந்தா (உடுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திரு திருமதி சோமசுந்தரத்தின் அன்பு மருமகனும், திருமதி மேரிஸ்ரெலா (கனடா), காலஞ்சென்ற J.S. அல்பேட், றொபேட் (லண்டன்), றிச்சேட் (ஆஸ்திரேலியா), சரவணமுத்து (கனடா), மிரியம் (லண்டன்,) டிலோ (ஆஸ்திரேலியா), யோகா (ஜேர்மனி), சிறீதயாளன் (In Service Adviser, உடுவில்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (5-2-97) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**திருமதி யூலியற் நடராஜா**

(45092)

## நல்லப்பா சரவணமுத்து

தெல்லிப்பளை நல்லகிணத்தடியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லப்பா சரவணமுத்து 03 - 02 - 1997 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் பாசமிகு கணவரும், தெய்வநாயகி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04 - 02 - 97 (இன்று) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ச. தெய்வநாயகி**

பெரிய மதவடி,
சுன்னாகம். (9238)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டட் டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04 - 02 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org